

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) திருச்சி "அன்புச் சோலை" மையங்களை தொடங்கி வைத்து, மகளிர் சுய உதவிக்குழுக்களால் தயாரிக்கப்பட்ட சிறுதானிய உணவு வகைகள் மற்றும் சத்துமாவு கொண்ட பெட்டகங்களை வழங்கினார். உடன் கே.என். நேரு, அன்பில்மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்ட அமைச்சர்கள், எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) திருச்சியில், ஒரு மாநகராட்சியில் இரண்டு வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள், சென்னை பெருநகராட்சியில் 3 மையங்கள் மற்றும் தொழில் மாவட்டங்களான இராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரியில் 2 மையங்கள் என மொத்தம் 25 "அன்புச் சோலை" மையங்களை காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ். இரகுபதி, பி. கீதாஜீவன், எஸ்.எஸ். சிவசங்கர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி. சிவ.வீ.மெய்யநாதன், எம்.பி.க்கள் திருச்சி சிவா , ஆ. ராசா, துரை வைகோ, எம்.எல்.ஏ.க்கள் டாக்டர் வீமுத்துராஜா, அப்துல் சமது, ஸ்டாலின் குமார், தியாகராஜன். இனிகோ இருதயராஜ், மேயர் மு. அன்பழகன், மற்றும் எம்.எம். அப்துல்லா, துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக - தமிழ்நாட்டில் 25 ‘அன்புச் சோலை’ மையங்கள்!

## திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, நவ.11-**

**மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, 25 “அன்புச் சோலை” மையங்களை திருச்சி ராப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) திருச்சிரா ப்பள்ளி, பொன்மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக “அன்புச் சோலை” மையங்கள் ஒரு மாநகராட்சியில் இரண்டு வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள், சென்னை பெருநகராட்சியில் 3 மையங்கள் மற்றும் தொழில் மாவட்டங்களான இராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரியில் 2 மையங்கள் என மொத்தம் 25 “அன்புச் சோலை” மையங்களை தொடங்கி வைத்தார்கள்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலமாக குழந்தைகள், மகளிர், கல்வி பயிலும் மாணவ, மாணவியர், திருநங்கைகள் மற்றும் முதியோர் அனைவரையும் பேணிகாக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டங்கள் இத்துறையின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. முதியவர்கள் அமைதியான, கண்ணியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை நடத்துவதை உறுதிசெய்து, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதே இத்திட்டங்களின் நோக்கம் ஆகும்.

**மூத்த குடிமக்களுக்கான “அன்புச் சோலை” மையங்கள்**

தமிழ்நாட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூத்த குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதற்காக ஒரு மாநகராட்சியில் இரண்டு அன்புச் சோலைகள் வீதம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் 20 அன்புச் சோலைகள் அமைக்கப்படுகின்றன. மேலும், 2 தொழில்துறை மாவட்டங்களான இராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரி, பெருநகர மாநகராட்சியான சென்னையில் தண்டையார் பேட்டை, சோழிங்கநல்லூர் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில் ‘‘அன்புச்சோலை’’ மையங்கள் தொடங்கப்பட்டு, இயன்முறை மருத்துவ சேவைகள் (Physiotherapy), யோகா, பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் நூலகம் போன்றவை வழங்கப்படவுள்ளன.

**அன்புச்சோலையின் முக்கிய நோக்கங்கள்**

முதியோருக்கு வழங்கப்படும் இயன்முறை மருத்துவ சேவைகள், பொழுதுபோக்கு, திறன் மேம்பாடு நிகழ்வுகள் மூலம் மனமும், உடலும் சுறுசுறுப்புடன் இருக்கச் செய்தல், முதியோர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு, சமூக உறவுகளை வலுப்படுத்துதல், ஆண், பெண் இருவரும் வேலை பார்க்கும் குடும்பங்களுக்கு, அவர்களது மூத்த உறுப்பினர்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு அன்புச் சோலை மையங்கள் செயல்படும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) திருச்சி , பொன்மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”அன்புச் சோலை மையங்களை தொடங்கி வைத்து, மூத்த குடிமக்களுடன் கேரம் விளையாடினார். உடன் அமைச்சர்கள், எம்.பி. – எம்.எல்.ஏக்கள் உள்ளனர்.

**அன்புச்சோலையின் சமூக நோக்கம்**

அன்புச்சோலை திட்டமானது, முதியோர்களை போற்றும் தமிழ் பாரம்பரியத்தை பிரதிபலிப்பதோடு, முதியோர்களின் பாதுகாப்பையும், நன்முறையில் பராமரிப்பதையும் உறுதி செய்வதால் அவர்களது குடும்பத்தினருக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறது. இதனால் முழுமையான நிறுவனம் சார்ந்த பராமரிப்பு தேவையை குறைத்தும், குடும்ப பிணைப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது. மேலும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்கள், தங்கள் வீட்டிலுள்ள முதியோர்களை பகல் நேரங்களில் பராமரிக்க இயலாததால் வேலைக்கு செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, வேலைக்கு செல்லும் பெண்களுக்காகவும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்களுக்காகவும், அவர்களது வீட்டு முதியவர்களுக்கு தனிமையில்லாமல் நேரத்தை சிறந்த முறையில் செலவு செய்து, மகிழ்வாக வாழ வழிவகை செய்யும் நோக்கத்தோடும் இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக திருச்சி ராப்பள்ளியில் நேற்றிறைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், 25 அன்புச் சோலை மையங்களை காணொலி வாயிலாக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, மூத்த குடிமக்களுக்கு மகளிர் சுயஉதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட சிறுதானிய உணவு வகைகள் மற்றும் சத்துமாவு கொண்ட பெட்டகங்களை வழங்கி, அவர்களுடன் கலந்துரையாடி, கேரம் விளையாடினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, துரை வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வீ.முத்துராஜா, அப்துல் சமது, ஸ்டாலின் குமார், தியாகராஜன், இனிகோ இருதயராஜ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல இயக்குநர் திருமதி. மா.செள.சங்கீதா, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் எல், மதுபாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**பெங்களூருவில்**

# திருமதி துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ நூல் வெளியீடு!

## டாக்டர் ஜெய.ராஜமூர்த்தி சிறப்புரை! போர்முரசு கதிரவன் ஏற்பாடு!



பெங்களூரு, நவ. 11-

கர்நாடக மாநிலம் பெங்களூருவில், கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில், திருமதி துர்காஸ்டாலின் அவர்கள் எழுதிய “அவரும் நானும்” பாகம் 2 நூல் அறிமுக விழா நவம்பர் 10, 2025 அன்று காலை பெங்களூருவில் அமைந்துள்ள வேளாண் பல்கலைகழக கூட்டரங்கில் கருநாடக மாநில தமிழ் பத்திரிக்கையாளர்கள் சங்கத் தலைவர் முத்துமணி நன்னன் வரவேற்புரையில் மாநில இலக்கிய அணி செயலாளர் போர்முரசு கதிரவன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இவ்விழாவில் மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி (மேனாள் இயக்குனர் - மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள்) கலந்து கொண்டு நூலினை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.

தலைமை இலக்கிய அணி பொருளாளரும், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான நா.சந்திரபாபு கலந்து கொண்டு சிறப்பித்து மகிழ்ந்தார்.

மேலும் கருநாடக மாநில திராவிட முன்னேற்ற கழக அவைத் தலைவர் மா.பெரியசாமி, மாநில பொருளாளர் தட்சிணாமூர்த்தி, மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி சற்குணம் இளமதி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் முருகானந்தம், முன்னாள் தொ.மு.ச. துணை செயலாளர் ஆ.கரிகாலன் மற்றும் தங்கவயல் கரிகாலன், டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி அறக்கட்டளை குழுமத்தைச் சார்ந்த திருமதி வழக்கறிஞர் பா.பிரதிஷ்டா ராமமூர்த்தி, பா.பிரதிஷ்டா அவர்களின் கணவர் வழக்கறிஞர் ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் உடன்பிறப்புக்கள், தமிழ் சொந்தங்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாமேடையில் நூலின் சிறப்பு பிரதியை ரூபாய் 5000/ செலுத்தி பெற்று கொண்டனர். இறுதியாக ஏ.கே. பாபு கரிகாலன் நன்றி கூறினார்.



தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியனை, மத்திய மெக்சிகோ, அகுவாஸ்கலியென்டஸ் மாநில கவர்னர் திருமதி மரியா தெரசா ஜிமென்ஸ் எஸ்கிவல், மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். இச்சந்திப்பின் போது, உயர் கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், அகுவாஸ்கலியென்டஸ் மாநில பொருளாதார வளர்ச்சி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அரசு செயலாளர் ஈசெள கார்சா டி வேகா, இலக்கு முறைத் தொடர்பு (DIGITAL COMMUNICATION) இயக்குநர் ஜோஸ் ஜூலியா ரமிரஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**மிகுந்த விழிப்போடு இருந்து ‘SIR’ பணிகளில்**

# தகவல் தொழில்நுட்ப அணியின் ‘OTN-AC’க்களையும் - ‘BDA’க்களையும் - கழக நிர்வாகிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வீர்!

## கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை!

**சென்னை, நவ.11-**

**மிகுந்த விழிப்போடு இருந்து SIR பணிகளில் தகவல் தொழில்நுட்ப அணியின் OTN-ACக்களையும் BDAக்களையும் கழக நிர்வாகிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வீர்! என கழகத் தகவல்தொழில்நுட்ப அணிச் செயலாளர் - அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிக்கை விடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு :-

அனைத்து மக்களின் வாக்குரிமையையும் பாரபட்சமின்றி பாதுகாத்து, ஜனநாயகத்தை நிலைநாட்டும் பணியில் நம் தலைவர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே முழுமையாக ஈடுபட்டு வரும் நிலையில், பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணியின் சதியை முறியடிக்கும் வகையில், SIR உள்ளிட்ட தேர்தல் களப் பணிகளில் உதவுவதற்காக தகவல் தொழில்நுட்ப அணியின் அதிகாரப்பூர்வ BDA பட்டியலை https://www.dmk.in/ta/resources/bda-list/ என்ற தி.மு.க. இணையதளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்கள் ஏற்கனவே நமக்கு வழங்கிய ஓரணியில் தமிழ்நாடு செயல்திட்டத்தின்போது, அதற்கான செயலி குறித்து பயிற்சியளிக்கவும்-பயன்படுத்தவும் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ஓரணியில் தமிழ்நாடு தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (OTN-AC) ஒவ்வொரு தொகுதிக்கும் நியமிக்கப்பட்டு பணியாற்றினார்கள்.

SIR உள்ளிட்ட தேர்தல் களப் பணிகளிலும் OTN-ACகள் தங்களுக்கு உறுதுணையாக இருந்து, BDAக்களுக்கு உரிய பயிற்சியையும் ஆலோசனைகளையும் வழங்கி, விரைவாகவும் சரியாகவும் பணிகளை நிறைவேற்றிடத் துணை நிற்பார்கள். மாவட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைபடி பகுதி ஒன்றியம் தோறும் பயிற்சி கூட்டங்கள் நடத்தவும் இவர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

இந்தியக் குடிமக்களின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போராடும் ஒரே தலைவரான நம் திராவிட நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்திட மாவட்டக் கழகச் செயலாளர்களும், ஒன்றிய-நகர-பேரூர் கழகச் செயலாளர்களும் தேர்தல் சார்ந்த கழகப் பணிகளில் நமது தகவல் தொழில் நுட்ப அணியை, குறிப்பாக OTN-ACகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் - கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் - அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.